## சுருக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் 2012 – 2013 – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை – பல்பொருள் அங்காடிகள் – குறைந்த விலையில் பொருட்களைப் பெறும் வசதி – காவல் துறையினருக்கு வழங்கப்பட்ட சலுகைகள் – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத்துறை அலுவலர்களுக்கும் நீட்டிப்பு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உள் (காவல்–17) துறை

நாள்.8.06.2012

அரசாணை (நிலை) எண்.421

படிக்க :–

1. அரசாணை (நிலை) எண்.824, உள் (காவல்–13) துறை, நாள். 7.12.2012.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24.04.2012 அன்று சட்டப்பேரவையில் அறிவித்த அறிவிப்புகள்.
3. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.4719/ஈ4/12, நாள்.3.5.2012.
4. கூடுதல் காவல்துறை தலைவர் / சிறைத்துறை தலைவர் கடித எண்.15774/ப.வா.2/2012, நாள்.3.05.2012.

~~O~~

ஆணை :–

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 24.04.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு பதிலளிக்கும்போது பல்வேறு அறிவிப்புகளுடன் கீழ்க்கண்ட அறிவிப்பினையும் வெளியிட்டுள்ளார்கள்.

> "காவல் துறையினருக்காக என்னால் அண்மையில் சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் திறந்து வைக்கப்பட்ட பல்பொருள் அங்காடிகள், அதாவது Canteens மூலம் பொருட்களை குறைந்த விலையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் அலுவலர்களும் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படும். இதனால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையில் பணிபுரியும் 6,800 அலுவலர்கள் பயன் அடைவார்கள்."



PA/C Supt.
Note & NC
1 0

மேலும், சிறைத்துறைக்கான மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது 3.05.2012 அன்று கீழ்க்கண்ட அறிவிப்பினையும் வெளியிட்டுள்ளார்கள்.

"இந்தியாவிலேயே முதல்முறையாக அனைத்து பொருட்களையும் குறைந்த விலையில் பெறக்கூடிய கேன்டீன்களை (Canteen) இந்த அரசு அமைத்து உள்ளது. இந்த கேன்டீன்கள் காவல்துறையினரும், தீயணைப்புத் துறையினரும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஏற்கனவே அறிவித்து இருக்கிறேன். இப்போது சிறைத்துறையில் பணிபுரிபவர்களும் இந்த கேன்டீன்களை பயன்படுத்தி இதன்மூலம் பயன்பெறலாம்".

2. மேற்காணும் அறிவிப்புகளுக்கிணங்க, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் தமது செயற்குறிப்பில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், காவல் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இராணுவத் துறையில் பணியாற்றும் அலுவலர் மற்றும் பணியாளர்களைப் போன்று குறைந்த விலையில் பொருட்கள் பெறும் பொருட்டு காவல் துறையினருக்கான பல்பொருள் அங்காடிகள் (Canteens) ஆர்.சி ஆவடி (சென்னை), தமிழ்நாடு சிறப்பு காவலர் முதல் படை பிரிவு, திருச்சி மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவலர் 6வது படை பிரிவு மதுரை ஆகிய 3 இடங்களில் ஏற்படுத்த அரசினால் ஒப்பளிப்பு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதேபோன்றே, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணியாற்றும் 6,800 சீருடை அலுவலர்கள் ஒய்வு பெற்ற அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களும், இது தவிர பணிக்காலத்தில் மரணமடைந்த அலுவலர்களின் குடும்பத்தினர்களும், அருகாமையில் அமையப் பெற்றுள்ள காவல் துறையினருக்கான பல்பொருள் அங்காடிகள் (Canteens) மூலம் குறைந்த விலையில் பொருட்கள் பெற்றுக் கொள்ள ஏதுவாக அரசின் ஆணைகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். அதேபோன்று, கூடுதல் காவல்துறை இயக்குனர் / சிறைத்துறை தலைவர் தமது முன்மொழிவில், காவல்துறை சீருடை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது போன்று சிறைத்துறை சீருடைப் பணியாளர்களுக்கும் பல்பொருள் அங்காடிகளில் மலிவு விலையில் பொருட்கள் வாங்கிடும் சலுகையை நீட்டிப்பு செய்ய அரசினைக் கோரியுள்ளார்.

3. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர், சிறைத்துறை தலைவர் ஆகியோரது முன்மொழிவுகளை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கேற்ப, காவல் துறையினரைப் போன்றே, பணிபுரியும், ஓய்வுபெற்ற, காலஞ்சென்ற தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத்துறை, சீருடை அலுவலர்களின் குடும்பங்கள் பயனடையும் வகையில் காவல் துறையினருக்கு அமைக்கப்பட்டுள்ள பல்பொருள் அங்காடிகள் (Canteens) மூலம் இக்குடும்பங்களும் பொருட்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள அரசு ஆணையிடுகிறது.

..3..

4. மேலே, பத்தி 3ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு, குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக்கொள்ள ஏதுவாக தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத்துறையினருக்கும் மதிப்புக் கூட்டு வரி விலக்கு அளிப்பது குறித்த உரிய அறிவிக்கை வணிகவரி மற்றும் பதிவுத்துறை வெளியிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். ராஜகோபால்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சென்னை–8.
சிறைத்துறை தலைவர், சென்னை–8.
மாநில முதன்மைக் கணக்காயர் (A&E) , சென்னை–18.
மாநில முதன்மைக் கணக்காயர் (CA), சென்னை–18.
மாநில கணக்காயர் (CAS), சென்னை–9.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள் / கருவூல அலுவலர்கள்.
நகல்:–
நிதித் (BG-I/BG-II/Home-II) துறை, சென்னை–9.
வணிகவரி மற்றும் பதிவுத்துறை, சென்னை–9.
(உரிய அறிவிக்கை வெளியிடும் பொருட்டு)
உள் (காவல்–13) துறை, சென்னை–9.
உள் (சிறை–II) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், உள்துறை, சென்னை–9.
காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை–5.
இ.கோ / உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.